# BEACH SAFETY

# கடற்கரை பாதுகாப்பு



## Tamil

**Surf lifesavers and lifeguards prominently display flags and warning signs to indicate the safest areas to swim for the beach going public.**

கடற்கரைக்கு வரும் பொதுமக்கள் நீந்துவதற்கேற்ற பாதுகாப்பான பகுதிகளைக் குறிக்கும் கொடிகளையும் எச்சரிக்கை அடையாளங்களையும் கடல் அலைகளில் உயிர்காப்பவர்கள் மற்றும் உயிர்பாதுகாவலர்கள் பார்வைக்கு வைப்பார்கள்.

## THE EASY WAY TO STAY SAFE AT THE BEACH IS TO REMEMBER THE 'FLAGS' MESSAGE

## 'கொடிகள்' (F-L-A-G-S) வலியுறுத்தும் செய்தியை நினைவில் கொள்வதே கடற்கரையில் பாதுகாப்பாக இருப்பதற்கான எளிய வழியாகும்

### F — FIND THE FLAGS AND SWIM BETWEEN THEM

**கொடிகளை பார்த்து அவற்றுக்கு இடையிலேயே நீந்துங்கள்**

அப்பகுதி உயிர்காப்பவர்கள் மற்றும் உயிர்பாதுகாவலர்களின் கண்காணிப்பின் கீழ் இருக்கிறது என்பதை சிகப்பு மற்றும் மஞ்சள் கொடிகள் குறிக்கின்றன. அவை கடற்கரையில் பாதுகாப்பாக நீந்துவதற்கான இடத்தைக் குறிக்கின்றன.

### L — LOOK AT AND READ THE SAFETY SIGNS

**பாதுகாப்பு அடையாளங்களை கவனித்து படிக்கவும்**

ஆபத்து ஏற்படும் இடங்களைக் கண்டறியவும், கடற்கரையின் தினசரி நிலைமைகளை அறிந்து கொள்ளவும் பாதுகாப்பு அடையாளங்கள் உதவுகின்றன. இந்த அடையாளங்கள் கடற்கரைக்கு செல்லும் வழிகளிலும் கொடிகள் வைக்கப்பட்ட பகுதிகளிலும் வைக்கப்பட்டிருக்கும். தண்ணீருக்குள் இறங்கும் முன் அவற்றை கவனமாக படிக்கவும்.

### A — ASK A LIFESAVER OR LIFEGUARD FOR SOME GOOD ADVICE

**நல்ல அறிவுரைகளைப் பெற ஒரு உயிர்காப்பாளர் அல்லது உயிர்பாதுகாவலரிடம் கேளுங்கள்**

அலைகளின் நிலைமைகள் விரைவாக மாறிவிடலாம் (தண்ணீரின் ஆழம், நீரோட்டங்கள், அலையின் அளவு மற்றும் அலையின் வகை). தண்ணீருக்குள் இறங்கும் முன் ஒரு உயிர்காப்பாளர் அல்லது உயிர்பாதுகாவலரிடம் பேசுங்கள்.

### G — GET A FRIEND TO SWIM WITH YOU

**உங்களுடன் நீந்துவதற்கு ஒரு நண்பரை அழைத்து வாருங்கள்**

எப்பொழுதும் ஒரு நண்பருடன் நீந்துங்கள் அதனால் ஒருவரை ஒருவர் பாதுகாத்துக் கொள்ளலாம், தேவைப்பட்டால் உதவியும் பெறலாம். குழந்தைகள் <u>எப்பொழுதும்</u> பெரியவர்களின் கண்காணிப்பில் இருக்க வேண்டும்.

### S — STICK YOUR HAND UP FOR HELP

**உதவி தேவைப்பட்டால் உங்கள் கைகளை உயர்த்திக் காட்டுங்கள்**

தண்ணீருக்குள் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால், அமைதியாக இருங்கள். கையை உயர்த்திக் காட்டி உதவி வேண்டி தெரியப்படுத்தி, உதவி வரும் வரை மிதந்தபடி காத்திருங்கள். ஒரு அலையின் ஓட்டம் அல்லது அலையின் திசையோடு மிதந்து வரவும். அதனை எதிர்த்து நீந்த முயற்சிக்க வேண்டாம்.





## REMEMBER NO FLAGS = NO SWIM

## கொடிகள் இல்லாவிட்டால் = நீந்தக்கூடாது என்பதை நினைவில் கொள்ளவும்

Supported by Queensland Government

For additional information visit **www.beachsafe.org.au**

# WHAT DO THE FLAGS AND SIGNS MEAN?
## கொடிகளும் அடையாளங்களும் எதைக் குறிப்பிடுகின்றன?



### RED AND YELLOW FLAGS
**சிகப்பு மற்றும் மஞ்சள் கொடிகள்**

மிகவும் பாதுகாப்பான பகுதியைக் குறிக்கின்றது, அது கடல் லைகளில் உயிர்காப்பவர்கள் மற்றும் உயிர்பாதுகாவலர்களின் கண்காணிப்பில் இருக்கும் பகுதியுமாகும்.



### YELLOW FLAG
**மஞ்சள் கொடி**

எச்சரிக்கை - சூழ்நிலைகள் ஆபத்து விளைவிக்கக்கூடியதாக உள்ளன, இருப்பினும் நீந்துவதற்கு போதுமான பாதுகாப்புடன் இருக்கிறது.



### RED FLAG
**சிகப்புக் கொடி**

ஆபத்து - தண்ணீருக்குள் இறங்க வேண்டாம்.
சிகப்புக் கொடி காண்பிக்கப்படுகையில், கடற்கரையில் நீந்துவது தடை செய்யப்பட்டிருக்கும்.



### RED AND WHITE QUARTERED FLAG
**கால்பங்கு சிகப்பும் வெள்ளையும் கொண்ட கொடி**

அவசரகால வெளியேற்றம் - தண்ணீரை விட்டு உடனடியாக வெளியேறவும்.



### BLUE FLAG
**நீலக் கொடி**

அலைச்சறுக்குப் பலகை விளையாட்டுக்கான பகுதி - அலைச்சறுக்குப் பலகையில் ஓடுபவர்கள் சிகப்பு மற்றும் மஞ்சள் கொடிகளுக்கு வெளியே தான் இருக்க வேண்டும்



### DANGEROUS CURRENTS
**ஆபத்தான நீரோட்டங்கள்**

அபாயகரமான நீரோட்டங்கள் உள்ள பகுதி



### MARINE STINGERS
**கடல்வாழ் விஷ உயிரினங்கள்**

தண்ணீரில் ஆபத்தான கடல்வாழ் விஷ உயிரினங்கள் உள்ளன



### CROCODILES
**முதலைகள்**

இப்பகுதியில் ஒரு முதலை(கள்) காணப்பட்டுள்ளது



### SHARKS
**சுறாக்கள்**

இப்பகுதியில் ஒரு சுறா(க்கள்) காணப்பட்டுள்ளது



### BLUE BOTTLES
**நீல நிற ஈக்கள்**

நீல நிற ஈக்கள் உள்ளன



### HIGH SURF
**மிக உயரமான கடல் அலை**

கடல் அலைகள் மிக உயரமாகவும் ஆபத்தாகவும் உள்ளன அல்லது காயத்தை ஏற்படுத்தக்கூடிய அமிழ்த்தும் அலைகள் உள்ளன



### NO SWIMMING
**நீந்துதல் தடை செய்யப்பட்டுள்ளது**



### ONLY SWIM BETWEEN THE RED AND YELLOW FLAGS
**சிகப்பு மற்றும் மஞ்சள் கொடிகளுக்கு இடையில் மட்டும் நீந்தவும்**

Supported by

Queensland Government

For additional information visit **www.beachsafe.org.au**